# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2012 - 2013

## தமிழ்மொழி - வளர் தமிழ் 4

சுட்டெண்:.......................................................... நேரம்: 120 மணித்துளிகள்

**1). தரப்பட்டுள்ள சொற்களில் மிகப் பொருத்தமானதைத் தெரிந்து; கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. தமிழ்மொழியிலுள்ள உயிர் மெய்யெழுத்துகள் ______________

   (12, 30, 216)

2. முயற்சி உடையார் ________________ அடையார்.

   (புகழ்ச்சி, இகழ்ச்சி, மகிழ்ச்சி)

3. மாறன் பள்ளிக்குச் சென்றான். ______________ மழை பெய்தது.

   (இப்பொழுது, எப்பொழுது, அப்பொழுது)

4. இலக்கண நூல்களில் முதன்மையானது _________________.

   (ஆத்திசூடி, சிலப்பதிகாரம், தொல்காப்பியம்)

5. இரவெல்லாம் பூங்காடு பகலெல்லாம் வெறுங்காடு அது __________

   (காடு, வானம், வீடு)

6. இரண்டு அடிகளைக் கொண்ட அறநூல் ______________.

   (மூதுரை, நாலடியார், திருக்குறள்)

7. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று ______________________

(திருக்குறள், சிலப்பதிகாரம், தொல்காப்பியம்)

8. பிறர் துன்பப்படும் போது நாம் ______________________ .

(உதவவேண்டும், உதவக்கூடாது, பார்க்கக்கூடாது)

9. முக்கனி என்பது ______________________ .

(இயல் இசை நாடகம், மா பலா வாழை, அறம் பொருள் இன்பம்)

10. வெய்யிலில் கிடந்த கண்ணாடி ______________

என மின்னியது.

(பளபள, மளமள, வளவள)

11. நாங்கள் சென்ற மாதம் சுற்றுலாச் ______________.

(செல்வோம், சென்றோம், செல்கின்றோம்)

12. இனிய நண்பனை ______________ அறியலாம்.

(இடுக்கணில், விளையாட்டில், இன்பத்தில்)

13. சிலப்பதிகாரம் இளங்கோ அடிகளால் ______________

(எழுதினார், எழுதியது, எழுதப்பட்டது)

14. தமிழருடைய வீரத்தைக் கூறும் நூல் ______________ .

(சிலப்பதிகாரம், திருக்குறள், புறநானூறு)

15 தன் ______________ கொண்டு அம்பலம் ஏறவேண்டும்.

(பழம், பலம், பளம்)

16. அரசன் படை நடத்திச் செல்லும் போது கொட்டும் முரசு

______________ .

(போர்முரசு, கொடைமுரசு, மணமுரசு)

9. தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்கு குறையாமல் கதை எழுதுக.



______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 15



17. ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் பறவை ______________.

(காகம், கொக்கு, கிளி)

18. தமிழரின் சிறந்த கொண்டாட்டங்களில் ஒன்று ______________.

(வாணிவிழா, ஆண்டுவிழா, ஆடிப்பிறப்பு)

19. முக்கனிகளும் முழுப்பயன் தரும் காலம் ______________.

(ஐப்பசி, ஆடி, புரட்டாதி)

20. காட்டு அரசனாக வாழ்ந்த விலங்கு ______________.

(முயல், நரி, சிங்கம்)

21. தோற்கருவிகளில் ஒன்று ______________.

(வீணை, புல்லாங்குழல், மேளம்)

22. அப்பா அடுத்த மாதம் புதிய சிற்றுந்து ______________.

(வாங்கினார், வாங்குவார், வாங்குகின்றார்)

23. நண்பர்களிடம் குறைகண்டால் ______________ கொள்ள வேண்டும்.

(விலகிக், பொறுத்துக், மறுத்துக்)

24. கதிரவன் காலிக்கும் திக்கு ______________.

(மேற்கு, தெற்கு, கிழக்கு)

25. முத்தமிழ்க் காப்பியம் என அழைக்கப்படுவது ______________.

(மணிமேகலை, சிலப்பதிகாரம், திருக்குறள்)

26. கூலங்களில் ஒன்று ______________.

(பிட்டு, நெல், பால்)

27. இங்கே பல நூல்கள் உள்ளன ______________ ஒன்றை நீ எடுத்துக்கொள்.

(அவற்றுள், இவற்றுள், எவற்றுள்)

28. மயில் ஆலுவதைப் ______________ அழகாக இருந்தது.

(கேட்கக்கேட்க, நினைக்கநினைக்க, பார்க்கப்பார்க்க)

29. இராவணன் கொடியில் இருக்கும் முத்திரை ______________.

(வில், வீணை, மீன்)

30. தொன்மை என்றால் ______________ ஆகும்.

(மிகப்புதுமை, மிகஇளமை, மிகப்பழைமை)

புள்ளிகள் 30



8) **பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.**

1. தமிழில் உள்ள முதல் எழுத்துகள் எத்தனை ?

______________________________

______________________________

2. கிளித்தட்டு விளையாட்டில் மறிக்கும் கன்னையின் தலைவரை எப்படி அழைப்பர்?

______________________________

______________________________

3. "குடிமக்கள் காப்பியம்" என்று அழைக்கப்படும் நூல் எது?

______________________________

______________________________

4. மிருதங்கத்தின் பண்டைய பெயர் என்ன?

______________________________

______________________________

5. ஆடிப்பிறப்பன்று செய்யப்படும் உணவுப் பண்டங்கள் இரண்டு தருக.

______________________________

______________________________

புள்ளிகள் 10

7) **மாறி இருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி, கருத்துள்ள சொல்லியமாக்குக.**

1. சென்றோம் / சுற்றுலாச் / நாங்கள் / கனடாவுக்கு

______________________________________________.

2. ஒலித்தது / கொடை / அரசன் / வழங்கும்போது / கொடைமுரசு

______________________________________________.

3. பொதுமறை / கூறுவர் / என்றுங் / திருக்குறளைப்

______________________________________________.

4. பரந்து / வாழ்கின்றனர் / தமிழர் / உலகெங்கும்

______________________________________________.

5. விடுகின்றார்கள் / பம்பரம் / சிறுவர்கள்

______________________________________________.

புள்ளிகள் 05



2). **கீறிட்ட இடங்களில் மிகப் பொருத்தமான சொல்லை எழுதுக.**

| மெல்லமெல்ல | வண்ணவண்ண | சலசல | படபட | பழக்கவழக்கம் |
|---|---|---|---|---|

1. ஒவ்வொரு மக்களினதும் ______________ வேறுபடும்.
2. புறா தன் சிறகைப் ______________ என அடித்துப் பறந்தது.
3. ஆற்றுநீர் ______________ என ஓடியது.
4. குழந்தை ______________ நடந்து சென்றது.
5. தோட்டத்தில் பல ______________ப் பூக்கள் பூத்திருந்தன.

புள்ளிகள் 05

3). **பொருத்தமான முடிக்கும் சொல்லை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.**

1. தமிழர் உலகெங்கும் பரந்து ______________.
2. குருவிக் குஞ்சு மெல்லமெல்ல பறக்கத் ______________.
3. நல்ல நண்பர்களுடன் நட்புக் கொள்ள ______________.
4. ஒருவர் செய்த உதவியை நாம் ______________.
5. மாதவியால் நடனம் ______________.

புள்ளிகள் 10

4) **கீழேயுள்ள பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

உலகின் தொன்மையான மொழிகளில் தமிழும் ஒன்று. தமிழில் பழைமை வாய்ந்த பல நூல்கள் உள்ளன. அவற்றுள் புறநானூறும் ஒன்று. புறநானூறு தமிழரின் வீரத்தைக் கூறுகின்றது. திருக்குறள், நாலடியார், மூதுரை ஆகியவை அறநெறி நூல்களாகும். மனிதன் எவ்வாறு வாழவேண்டும் என்பதை அறநூல்கள் கூறுகின்றன. இவற்றுள் திருக்குறள் சிறந்த அறநூல் ஆகும். இதை எழுதியவர் திருவள்ளுவர். மூதுரையை எழுதியவர் ஔவையார். சிலப்பதிகாரம், மணிமேகலை என்பவையும் மிகச் சிறந்த நூல்களாகும். அவை தமிழருடைய பண்பாட்டு வரலாறுகளைக் கூறுகின்றன. பாரதியார் கவிதைகள், பாவேந்தர் கவிதைகள் தற்கால நூல்களில் மிகச்சிறந்தவை.

1. அறநெறிநூல்கள் இரண்டு தருக.

______________________________

2. புறநானூறு எதைக் கூறுகிறது?

______________________________

3. தமிழருடைய பண்பாட்டு வரலாற்றைக் கூறும் நூல் ஒன்று தருக.

______________________________

______________________________

4. உலகின் தொன்மையான மொழி எது?

______________________________

5. மூதுரையை எழுதியவர் யார்?

______________________________

புள்ளிகள் 10



5) **மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்து கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| அறிவு | கேடு | உயர்வைத் | திருக்குறள் | அறநூல்களில் |
|---|---|---|---|---|

நட்பு அறிதல் என்பது, ஒருவர் தாம் நட்புக் கொள்ள விரும்புபவரைப் பற்றி அறிவதாகும். உண்மையான நண்பர்களின் நட்பே நமக்கு ______________ தரும். நல்ல நண்பர்களை, எமக்குக் ______________ விளைகிற காலத்தில் அறியலாம். நாம் அறிந்தோ அறியாமலோ தவறு செய்யும்போது கண்டித்து ______________ உரைப்பவர்களே நல்ல நண்பர்கள். வாழ்க்கை வழிகாட்டியான ______________ நட்பைப்பற்றிக் கூறுகிறது. ______________ ஒன்றான நாலடியாரிலும் நட்பின் உயர்வுபற்றிப் பாடப்பட்டுள்ளது.

புள்ளிகள் 10

6) **கீழே தரப்பட்டுள்ள சொற்களை உங்கள் வாழிடமொழியில் எழுதுக.**

1. தொடருந்து ______________
2. கோடைகாலம் ______________
3. குடை ______________
4. புலி ______________
5. சிற்றுண்டி ______________

புள்ளிகள் 05